செய்தி வெளியீடு எண்: 491 நாள் : 08.10.2015

## <u>செய்தி வெளியீடு</u>

## <u>பொது மக்களுக்கு குறைந்த விலையில் அரசு சிமெண்ட் - டான்செம்</u>

**தி இந்து** 8.10.2015 தேதியிட்ட நாளிதழில் சென்னை மாநகரத்தில் சிமெண்ட் விலை 50 கிலோ சிமெண்ட் மூட்டை ஒன்று ரூபாய் 420.00 வரை பில் செய்யப்பட்டு விற்கப்படுவதாகவும், இருப்பினும் அக்டோபர் 2013ல் ரூபாய் 235.00 என்று விற்கப்பட்ட சிமெண்ட் மூட்டை ஒன்று தற்போது ரூபாய் 420.00 என்று உயர்த்தப்பட்டு விற்பனை செய்வதாகவும் மற்ற மாநகரங்களின் சராசரி விலையைவிட இந்த விலை அதிகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது

மேலும், இந்த செய்தி அறிக்கையில் சில்லறை சிமெண்ட் விலை அக்டோபர் 2013, அக்டோபர் 2014, ஜனவரி 2015, மார்ச் 2015 மற்றும் அக்டோபர் 2015ல் ஒப்பீடு செய்யப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக சிமெண்ட் மூட்டை ஒன்றின் சில்லறை விலை கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### <u>தமிழ்நாட்டில் சிமெண்ட் சில்லரை விலை விபரம்</u>

| மாதம்/வருடம் | சில்லரை விலை(மூட்டை) |
|---|---|
| அக்டோபர் 2013 | 300.00 |
| அக்டோபர் 2014 | 320.00 |
| ஜனவரி 2015 | 380.00 |
| மார்ச் 2015 | 390.00 |
| அக்டோபர் 2015 | 405.00 |

இருப்பினும் மொத்த விற்பனையில் ரூ, 350.00 முதல் ரூ, 370.00 வரை தனியார் நிறுவனங்களால் சிமெண்ட் தற்போது விற்பனை செய்யப்படுகிறது.

**மேலும், தனியார் சிமெண்ட் நிறுவனங்கள் மட்டுமல்லாமல், தமிழ்நாடு சிமெண்ட்ஸ் நிறுவனத்தால் (டான்சம்) கடந்த காலங்களில் குறைவான விலைக்கு சிமெண்ட் விற்பனை செய்திருந்தாலும் தற்போது பிபிசி மூட்டை ஒன்று ரூ.380.00 என்ற விலையில் விற்பனை செய்து வருகின்றது என்று 'தி இந்து' நாளிதழில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது உண்மைக்கு புறம்பான செய்தியாகும்.**

அரசுக்கு சொந்தமான தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் தி உறிந்து நாளிதழில் குறிப்பிட்டதை போல் அல்லாமல் இன்றைக்கும் பொது மக்களுக்கு கடந்த காலங்களை போன்று தற்போதும் குறைந்த விலையிலேயே விற்பனை செய்து வருகிறது.

தற்போதைய அரசு சிமெண்ட் பிபிசி(போர்ட்லேண்ட் போசலோனா) விலை ரூ.303.00 (ஆலை விலை) ஓபிசி (ஆர்டினரி போர்ட்லேண்ட் சிமெண்ட்) ரூ.315.00 (ஆலை விலை) ஆகவும் வாடகை சேர்த்து அடக்கவிலை ரூ.330.00 ஆகவும் மற்றும் ரூ.340.00 ஆகவும் அரியலூர் சிமெண்ட் ஆலையிலிருந்து விற்கப்படுகிறது. ஆலங்குளம் சிமெண்ட் ஆலையிலிருந்து அரசு சிமெண்ட் மூட்டை ஒன்று பிபிசி(போர்ட்லேண்ட் போசலோனா) விலை ரூ.317.00 (ஆலை விலை) ஆகவும் வாடகை சேர்த்து ரூ.335.00 என்று அடக்க விலையாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

இந்த விலை கடந்த ஆறு மாதங்களாக நடைமுறையில் இருந்து வருகிறது. எனவே, அரசு சிமெண்ட் விலை அண்டை மாநிலங்களின் சிமெண்ட் விலைகளோடு ஒப்பிடும்பொழுதும், தனியார் நிறுவனங்களின் விலைகளோடு ஒப்பிடும்பொழுதும் பொது மக்களுக்கு முகவர்கள் மூலமாக குறைந்த விலையிலேயே சிமெண்ட் விற்கப்பட்டு வருகிறது. எனவே, அரசு சிமெண்ட் மூட்டை ஒன்று ரூ. 380.00 (பிபிசி) என்று விற்கப்படுகிறது என்பது தவறான செய்தி.

மேலும், அரசு சிமெண்ட் தென் மாவட்டங்களில் அதிக அளவில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கடந்த பல வருடங்களாக அரசு சிமெண்ட் சென்னை மாநகரத்தில் விற்பனை செய்யப்படவில்லை. எனவே அரசு சிமெண்ட் ரூ. 380.00 என்ற விலையில் சென்னையில் விற்கப்படுகிறது என்பதும் தவறான மற்றும் ஆதாரமற்ற செய்தியாகும்.

குறைந்த விலையில் சிமெண்ட் வாங்க விரும்பும் பொது மக்கள் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்தை கட்டணமில்லா தொலைபேசி எண்.1800 42522000 மூலம் எளிதாக தொடர்பு கொள்ளும் வசதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், **‘அம்மா சிமெண்ட் விற்பனை திட்டத்தின்’** மூலம் தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் உள்ள பொது மக்களுக்கு அவர்கள் வீடு கட்டவும் மற்றும் வீடு பழுது பார்க்கவும் சிமெண்ட் மூட்டை ஒன்று ரூ.190.00 என்ற விலையில் விற்பனை செய்து வருகிறது. இவை இன்று வரை இத்திட்டத்தின் மூலம் 7,95,565 மெ.டன் விற்பனை செய்யப்பட்டு 2,54,927 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

**நிர்வாக இயக்குநர் / டான்சம்**

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**